# செந்தூர வடிவழகை

ஓயாமல் உன்னுடைய மந்திரம் ஜபித்து
நான் மனம் உவந்து செய்த பூஜையெல்லாம்
இந்த உலகிலே பொய் என்று சொல்வது சாத்தியமோ
உண்மையாய் சொல்லும் அய்யா… உண்மையாய் சொல்லும் அய்யா… ஐயப்பா
தாயான உனையன்றி கதியிலேன்
என்னை நீ தள்ளிவிடல் நீதியாகுமோ.. தள்ளிவிடல் நீதியாகுமோ .. ஐயப்பா
தமியேன் செய்த அபராதம் சத கோடி யாயிலும்
க்ஷேமியாதிருப்பதழகோ
வாயார கிளிச்சொல் போன்ற நின் துதிகள்
(மைந்தன்) நான் முறையிட்டும் மனம் இறங்காதது ஏன்.. ஏன்.. ஏன்..
மனம் இறங்காதது ஏன் என்று அறியிலேன்
மாதேவன் மால் மைந்தனே
ஈயாதலோபற்கும் இருநான்கு செல்வமும் இசைந்தருள் புரியவில்லையா
ஈசன் மகிழ் தேவி லலிதேஸ்வரியின் பாலனே
பரிபூரணானந்தனே ஐயப்பா.. பரிபூரண.. பரிபூரணா.. ஐயப்பா

செந்தூர வடிவழகை செந்தமிழில் பாடவந்தோம்
உந்தன் முகம் காண வந்தோம் காந்த மலை நாடி வந்தோம்

பந்தளத்து பரம்பரையில் வந்துதித்த ஐயப்பா
சிந்தையிலே குடி கொண்ட சிங்கார ஐயப்பா

இருமுடி தலை தாங்கி சுமந்து வந்தோம் அப்பா
திருவடி சரணம் என்று நாடி வந்தோம் அப்பா
மகர மாதத்தில் மாமலை அடைந்தோமே
மகர ஜோதியில் எங்களை மறந்தோமே

ஹரிஹர சுதனே சரணம் சரணம் ஐயப்பா… அநாதி மூலப்பொருளே சரணம் ஐயப்பா

பரம தயாள குணாளா சரணம் ஐயப்பா… பாண்டிய ராஜா குமார சரணம் ஐயப்பா

சந்தன வர்ண சுவர்ண சரீரா ஐயப்பா.. சபரி கிரீசா ஹ்ருதய குகேசா ஐயப்பா

அன்னதான விஸ்தார உதாரா ஐயப்பா…. அகில லோக சரணாகத ரக்ஷகா ஐயப்பா

ஸ்வாமியே சரணம் ஐயப்பா.... சரணம் சரணம் ஐயப்பா